

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.1.2025) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எலைட் திட்டத்தின் (Elite Sportsperson Scheme) வீரர் ப்ரித்வி சேகரை சந்தித்து, ஆஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் நகரில் 24.1.2025 முதல் 26.1.2025 வரை நடைபெற்ற செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றதற்கான பரிசுக் கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பெற்றோர் உடனிருந்தனர்.




பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் / தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்க தலைவருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் பாரத சாரண சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி விழா நிகழ்வின் ஒரு பகுதியாக திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை போத்தமேட்டுபட்டி நேரு சிலை அருகில் 24 மாநிலங்கள் மற்றும் 4 நாடுகளைச் சார்ந்த சாரண சாரணியர் பங்கேற்ற தேசிய ஒற்றுமை பேரணியை நேற்று முன்தினம் (30.01.2025) கொடியசைத்து தொடங்கி வைத்தார். இப்பேரணியில் சாரண சாரணியர் தங்களது மாநிலங்களின் கலாச்சார உடை அணிந்து, பேண்டு வாத்தியம் இசை முழங்க கோஷங்களை எழுப்பியவாறு ஆர்வத்துடன் பங்கேற்றனர். இப்பேரணி மணப்பாறை நகர முக்கிய வீதிகள் வழியாக பேருந்து நிலையம், இரயில் நிலையம், பைபாஸ் சாலை வழியாக கலைஞர் சிலை அருகில் நிறைவடைந்தது. இந்நிகழ்வில் சமூகநலத்துறை அரசு செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், பள்ளிக்கல்வித்துறை அரசு செயலாளர் மதுமதி, மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் முனைவர் பொ.சங்கர், மாநில முதன்மை பேராணையர் பாரத சாரண சாரணியர் இயக்கம் பெருந்திரளணி பொறுப்பாளர் அறிவொளி, சாரண சாரணியர் இயக்க நிர்வாகிகள், பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள், ஆசிரிய பெருமக்கள், மாணவ, மாணவிகள், அரசுத்துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் – ஒற்றையர் பிரிவில்

# தமிழ்நாட்டைச் சேர்ந்த ப்ரித்வி சேகருக்கு ‘சாம்பியன்ஷிப்’ பட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, பிப். 1-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றப்ரித்வி சேகர் அவர்கள் சந்தித்து பரிசுக் கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக்கிட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் வெளிநாடுகளில் தொடர்ந்து நடைபெற்று வரும் போட்டிகளில் கலந்து கொள்ள வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறுதல், அதற்கான போக்குவரத்துச் செலவுகளை மேற்கொள்ளுதல், சத்தான உணவுகளை எடுத்துக் கொள்வது, மேம்பட்ட பிரத்யோகமான விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்துதல் ஆகிய செலவுகளை ஈடுகட்ட எலைட் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (Elite) திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வருடாந்திர ஊக்கத் தொகை ரூ.25 இலட்சத்தை தற்போது30 இலட்சமாகஉயர்த்தி வழங்கி வருகின்றது. மேலும் இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை 12 லிருந்து தற்போது 27ஆக உயர்த்தப்பட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பயன்பெற்று வருகின்றனர்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (Elite) திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு பயன்பெற்று வரும் மாற்றுத்திறனாளி டென்னிஸ் வீரர் ப்ரித்வி சேகர் அவர்கள்ஆஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் நகரில் 24.1.2025 முதல் 26.1.2025 வரை நடைபெற்ற செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பங்கேற்று, சாம்பியன்ஷிப் பட்டம் வென்றார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எலைட் திட்டத்தின் (Elite Sportsperson Scheme) வீரர் ப்ரித்வி சேகர் அவர்கள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 30.1.2025 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து, செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றதற்கான பரிசுக் கோப்பையை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்த சந்திப்பின்போது ப்ரித்வி சேகர் அவர்களின் பெற்றோர் தங்களது செலவில் குறிப்பிட்ட போட்டிகளில் மட்டுமே விளையாட வைக்க முடிந்த நிலையில், தற்போது எலைட் திட்ட விளையாட்டு வீரராக தேர்வு செய்யப்பட்ட பிறகு, தொடர்ந்து ஐரோப்பிய அளவிலான 3 டென்னிஸ் போட்டிகளில் முன்னணி விளையாட்டு வீரர்களுடன் விளையாடும் வாய்ப்பை பெற்றதால், ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் செலவுகள் குறித்த அச்சமின்றி விளையாடி வெற்றி பெற்றார்.

தங்கள் பிள்ளைகளின் விளையாட்டு ஆர்வத்தை புரிந்து அவர்களை பல்வேறு போட்டிகளில் விளையாட வைக்கும் பெற்றோர்களை ஊக்கப்படுத்தும் வகையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

இவர் சென்ற ஆண்டும் செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் பெற்றோர்கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு

# பட்டா வழங்க சிறப்பு முகாம்கள்!

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அறிவிப்பு!

சென்னை, பிப். 1-

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு பட்டா வழங்க சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது என்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில், 1961 ம் ஆண்டிலிருந்து பொது மக்களின் நலன் கருதி மனைகள், வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளை உருவாக்கி ஒதுக்கீடு செய்து வருகிறது.

அவ்வாறு ஒதுக்கீடு பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் முழுத் தொகையையும் செலுத்திய பிறகு நடைமுறையில் உள்ள வாரிய விதிமுறைகளின்படி விற்பனை பத்திரம் வழங்கி வருகிறது. விற்பனை பத்திரம் பெற்ற ஒதுக்கீடுதாரர்களுக்கு தமிழக அரசின் மேலான உத்தரவிற்கு இணங்க முதற்கட்டமாக சென்னை மாவட்டத்தில் வருவாய் துறையிட மிருந்து நில உரிமை ஆவணம் (பட்டா) பெறுவதற்கு ஏதுவாக முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் வாரிய திட்டங்களில் ஒதுக்கீடு பெற்றவர்கள் பட்டா பெற வருவாய் துறையுடன் இணைந்து சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இச்சிறப்பு முகாம்களில் ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெற ஏதுவாக துண்டு சீட்டு பிரசுரம் செய்தல், வீடு வீடாக சென்று வசிப்பவர்களிடம் உரிய ஆவணங்கள் சேகரித்தல் மற்றும் அனைத்து ஒதுக்கீடுதாரர்களுக்கும் கடிதங்கள் அனுப்பி பட்டா பெற்று கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்கள் இச்சிறப்பு முன் முயற்சியை பயன்படுத்தி தாங்கள் வீட்டு வசதி வாரியத்திடமிருந்து வாங்கிய சொத்திற்கு நில உரிமை ஆவணம் (பட்டா) பெறுவதற்கு ஏதுவாக விற்பனை பத்திரங்கள் மற்றும் இதர ஆவணங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பாக நடத்தப்படும் சிறப்பு முகாம்களில் ஒப்படைத்து பட்டா பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த அரிய வாய்ப்பின் மூலம் பயன் பெறுமாறு ஒதுக்கீடுதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

